# தேர்ச்சி: ஒன்று :-
# இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வார்

1

## 1.1. நான் இறைவாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளேன்

- பின்வரும் பாடலை உம்மால் பாட முடியுமா?



**என் ஆற்றலின் ஆண்டவரை......**

என் ஆற்றலின் ஆண்டவரை - நான்
எந்நாளும் போற்றிடுவேன் - நான்
அருள் மொழி கேட்க காலமெல்லாமவர்
காலடி அமர்ந்திடுவேன்.

ஆண்டவர் எனது அரணாவார்
அவரே எனக்கென்றும் துணையாவார்
வலிமையும் வாழ்வும் வழங்கும் தேவன்
என்னுடன் இருக்கின்றார்
என்றும் இருக்கின்றார்

ஆண்டவர் எனது மீட்பராவார்
அவரே எனக்கென்றும் ஒளியாவார்
வாழ்வாய் வழியாய் விளங்கும் தேவன்
சீர்வழி நடத்திடுவார்
அவர் வழி தொடர்ந்திடுவேன்

(இதயங்கள் சங்கமம் # 53)

- இப்பாடலின் கருத்துக்களை வகுப்பின் ஏனைய மாணவருடன் பகிர்ந்து கொள்ளவும்.

- இறைவன் அன்பே உருவானவர்.
- வயல்வெளி மலர்களை உடுத்துகிற இறைவன், பறவைகளைப் பாதுகாக்கும் இறைவன் உம்மையும் பாதுகாக்கிறார் என இயேசு கூறியுள்ளார்.
- உம்மைப் போலவே அனைவரும், படைப்பனைத்தும் இறைவனுடையவையே என உமது உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்பொழுது உண்மையாகவே இறைவனின் பிள்ளையாகிறோம்.

## சிந்திக்கவும்.

- முகம் பார்க்கும் கண்ணாடி முன் நீர் நிற்கும்போது உமக்குத் தெரிவது என்ன?
- வெளியிலுள்ள உருவம் மட்டுமே தெரியும்.
- இதயத்துள் உள்ளவற்றைக் காண முடியுமா?
- அதைப்பற்றி நினைப்பதே கடினமாக இருக்கும்.
- இவ்வாறே எம்முள் இருக்கும் இறைசாயலை, தெய்வத்தன்மையைப் புரிந்து கொள்வது எம்மில் பலருக்கு விளங்காமல் இருக்கலாம்.
- எம்முள் இருக்கும் இறைசாயல் என்ன?
- அது எங்கிருந்து வந்தது?

- பின்வரும் திருவிவிலியப் பகுதியை அவதானமாகப் படிக்கவும்.

**அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான். ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்.**

(தொ.நூ. 2:7-8)

- நாம் மற்றவருக்கு நன்மை செய்யும்போது எமது உள்ளார்ந்த குணச்சிறப்புகள் வழியாக இறைவனது குணச்சிறப்புகள் வெளிப்படுகின்றன.

- நான் யார்?
- எங்கிருந்து வந்தேன்?
- எனது குணச்சிறப்புகள் எவை?

இவை போன்ற கேள்விகளுக்கு விடை காணுவோம்.

எனவே நாம் இறைவனை இவற்றின் மூலம் அறியலாம்.

- இறைவனை நான் காணவேண்டுமாயின் எனது குணச்சிறப்புகளை என்னில் நான் காணவேண்டும்.
- இறைவன் தமது உயிர்மூச்சை எமது நாசிகளில் ஊதினார் என ஏற்கனவே நாம் படித்தோம்.



எம்மில் உள்ள குணச்சிறப்புகளை விசுவாச வாழ்வில் வளர்க்க வேண்டும்.
ஏதேன் தோட்டத்தில் எமது முதல் பெற்றோரை இறைவன் சுதந்திரமாக வாழச் செய்தார்.

## உமது வாழ்விற்கு:

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல.

(1 கொரி. 6:19)

எமது உடல் இறைவன் வாழும் ஆலயம். தூய ஆவியின் ஆலயமாக வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் மனிதத்துவம் இல்லாதவர்களாக வாழ்கிறோம். இறை அன்பிலிருந்து விலகியவர்களாக வாழ்கிறோம். இவற்றிலிருந்து நாம் எவ்வாறு விடுதலை அடையலாம் என சிந்திப்போம்.

ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம்.ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டுச் சொன்னார்.

(தொ.நூ. 2:16-17)

- ஏதேன் தோட்டத்தில் முழு அதிகாரத்தையும் கடவுள் மனிதனுக்கு அளித்தார். அதாவது நன்மை தீமையை அறிந்து அதனை முழு விருப்புடன் தெரிந்தெடுக்க அவனுக்கு சுதந்திரத்தை அளித்தார்.
- தனக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தைப் பயன்படுத்தி மனிதன் தவறான வழியில் தன்னை உட்படுத்திக் கொண்டான்.

- இப்பாவ நாட்டம் வளர்ந்து ஈற்றில் காயின் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்யும் அளவிற்கு பாவம் அதிகரித்தது.
- தீமை அதிகரித்து உலக முடிவுவரை வளர்ந்து வருகிறது.
- தமக்குள் தீய நாட்டம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- கடவுள் எமக்களித்த நிறைவாழ்வை நாம் சுவீகரித்துக் கொள்வதே மனித படைப்பில் இறைவனின் நோக்கமாகும்.

**எனது செபம்**

தூய ஆவியே,
எம் இதயத்தில்
எழுந்தருளி வாரும்.

தூய ஆவியே,
உமது கொடைகளால்
எம்மை நிரப்பியருளும்.

தூய ஆவியே,
எப்பொழுதும்
எம்மோடு தங்கியருளும்.

**எமது வாழ்விற்கு...**

நான் பாவத்தைத் தவிர்த்து
நல்வாழ்வு வாழப் பழகுவேன்.

**செயற்பாடு:**

1. மனிதன் இறைவனுக்கு எதிராகச் செய்த பாவங்களைப் பெயரிடுக.
2. முதல் பெற்றோரில் ஆரம்பமாகிய பாவம் இன்றுவரை சமூகத்தில் நிலைத்திருக்கின்றது என்பதை நான்கு உதாரணங்களுடன் விளக்குக.